**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.ம.சித்தேஷ் (தா/பெ (மறைந்த) திருமதி.சு.தேவகி) என்பவருக்கு 12.06.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.,

**பள்ளிக்கல்வி(தொ.க.3(1)) துறை**

அரசாணை (1டி) எண்.181

நாள் 10.11.2020
திருவள்ளுவர் ஆண்டு–2051
சார்வரி வருடம், ஐப்பசி–25
படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2) பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.37392/ஜே2/2019, நாள் 27.12.2019.
3) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்(ட்டி1) துறை, நாள் 23.01.2020

******

**ஆணை:–**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திரு.ம.சித்தேஷ் என்பவர் இளநிலை உதவியாளராக 12.06.2017 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக்கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார். தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டவரின் தாயார் திருமதி சு.தேவகி என்பார் திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி கல்வி மாவட்டம், பூனாம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்த போது பணிகாலத்தில் 23.02.2009 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.ம.சித்தேஷ் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 03.01.2011 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 25.07.1992 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியரைத் தவிர கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு பெற இதர வாரிசுதாரர்கள் இல்லை என்றும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவர்களது பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. மேற்கூறிய நிலையில், பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்தது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி கல்வி மாவட்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியையாகப் பணிபுரிந்த திருமதி.சு.தேவகி என்பவரின்

வாரிசான திரு.ம.சித்தேஷ் என்பவர் பார்வை 3–ல் உள்ள அரசாணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 12.06.2017 முற்பகல் முதல் பணிபுரியும் அவரது பணியினை வரன்முறைப்படுத்திட அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவர் பணியில் சேர்ந்த நாளான 12.06.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா. எண். 17034/ட்டி1/ 2020, நாள் 03.11.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.28603/ஜி1/2020–1, நாள் 06.11.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தீரஜ்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)

<u>நகல்</u>

பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத்(ஜி1) துறை,சென்னை–9.
தொழிலாளர் (ம)வேலை வாய்ப்புத்(ட்டி1) துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (அநமு பிரிவு) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
10/11/2020